**எம் சி. ஓ.பி எண். 123/2019**

**தேதி: 08.01.2025**

**எ.ம.சா. 2: திரு. தாராசங்கர், த/பெ.விஸ்வநாதன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணங்கள்,

| | |
|---|---|
| எ.சா.ஆ.1 | 2ம் எதிர்மனுதாரர் கம்பெனி பாலிசி |
| எ.சா.ஆ.2 | இன்வெஸ்டிகேஷன் ரிப்போர்ட் |

மேற்படி ஆவணங்கள் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ-2 ஆகிய ஆவணங்களாக குறியீடுச் செய்யப்படுகிறது.

**குறுக்குவிசாரணை**

விபத்து ஏற்படுத்திய வாகனம் காப்பீடு காலத்தில், என்னுடைய இன்சூரன்ஸ் கம்பெனியில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இன்சூரன்ஸ் பாலிசி போடுவதற்கு முன்பே விபத்து நடந்துவிட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநர் அவருடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு, குற்றவியல் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். இந்த விபத்து ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்றாலும், அதற்கு எங்களுடைய இன்சூரன்ஸ் கம்பெனி தான்

பொறுப்பு என்றாலும் இல்லை. இன்சூரன்ஸ் பாலிசி போடுவதற்கு முன்பே விபத்து நடந்துவிட்டது. சரவணன் விபத்து பதிவேட்டில் 6 PM மணிக்கு தான் விபத்து நடந்துள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் 6 PM மணி என்று போட்டுள்ளது ஆனால், அடுத்து ஷீட்டில் 5.30 PM மணி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.